be competent to deal with these two sciences. Such being the case why should they be merged and will the Government consider the proposal to maintain the *status quo*?

THE HON. THIRU C. N. ANNADURAI: Till 1923 the two departments were integrated and afterwards they were separate. The Government of India have been urging this Government to integrate them once again. I have been hearing the views of the various Members and it makes me feel that there are two sides to the problem. Certainly we will correspond with the Centre about the views expressed by hon. Members like Mr. K. Vinayakam, about the need for not integrating them.

### வேலூர் அரசினர் மருத்துவ மனை

*429 வினா.—திரு. மா. பா. சாரதி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூர் அரசினர் மருத்துவ மனையில் காது, தொண்டை, மூக்கு வைத்திய நிபுணர் (E.N.T. Specialist) கண் வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம். காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் மேல் படிப்பிற்குப் போய் விட்டதால் அவருக்குப் பதிலாக மற்றொரு மருத்துவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

**திரு. மா. பா. சாரதி:** தலைவர் அவர்களே, நியமனம் செய்யப் பட்ட டாக்டர் இப்பொழுது லீவு எடுத்துக் கொண்டாரா? இரண்டு மூன்று வருஷங்களாக அங்கு கண், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை செய்வதற்கு டாக்டர் இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. நிரந்தரமாக ஒரு டாக்டரை அங்கே நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா, அதை உடனடியாகச் செய்யுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கனவே டாக்டர் நியமனம் செய்தாகிவிட்டது. அவர் லீவு எடுத்துக் கொண்டிருந்தால், லீவு முடிந்தவுடன் மறுபடியும் அங்கே வந்து சேர்ந்துவிடுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) மேற்கு வங்க ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் பதவி நீக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. என். சங்கரய்யா, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. செ. பாலசுப்பிரமணியன், ஆகியவர்கள் கையெழுத்திட்டு, ஒரு ஒற்றி

வைப்புத் தீர்மானத்தை கொண்டுவர முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த மூவரில் ஒருவர் அந்தத் தீர்மானத்தைப் படித்து, அது எப்படி நமது சட்டப் பேரவை விதி 50, உள் விதி 10-க்கு உட்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்று தெரிவிக்கிறேன். அந்த உள் விதியில் குறிப்பிட்டபடி, இந்தத் தீர்மானம் தமிழக அரசின் பொறுப்புக்குள் எப்படி வருகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டி, அந்த விதிக்குள் எப்படி அடங்கி இருக்கிற காரியம் இது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நாங்கள் மூவரும் கையெழுத்திட்டுக் கொடுத்துள்ள தீர்மானத்தை முதலிலே படிக்கிறேன்.

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி எண். 43-இன் கீழ் பின் வரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததொரு திட்டவட்டமான பிரச்சினையை விவாதிப்பதற்காக வேண்டி சட்டப் பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

"அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமான முறையிலும் பார்லிமெண்டரி ஜனநாயக மரபுக்கு விரோதமான முறையிலும் மேற்கு வங்காள ஐக்கிய முன்னணி மந்திரி சபை பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள கெடுபிடி நிலைமை குறித்து விவாதிப்பதற்காக வேண்டி சட்டப் பேரவையின் அலுவல்கள் ஒத்திவைக்கப் படவேண்டுமென்று கோருகிறோம்."

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்கு விதிகள் தெளிவாக இருக்கின்றன. விதி 50-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைச் சொல்ல வேண்டியது தலைவர், அது தலைவர் செய்ய வேண்டிய காரியம். அதைத் தாங்களே சொல்ல விரும்புகிறீர்களா ?

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், விதி 50 தெளிவாக இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்னமேயே அதை நான் குறிப்பிட்டேன். அதைத் தாங்கள் தெளிவாக்க விரும்புகிறீர்களா ?

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், ரூல் 50-ல்,—

'That motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved.'

என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் எழுந்தவுடன் அருள்கூர்ந்து உறுப்பினர் உட்கார வேண்டும். நான்

முன்னால் குறிப்பிட்டதும், நீங்கள் இப்பொழுது குறிப்பிடுவதும் ஒன்றேதான். நான் விதி 50-ன் உட்பிரிவு 10 என்று குறிப்பிட்டேன். நீங்கள் தெளிவாகப் படித்தீர்கள். திரு. என். சங்கரய்யா அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானம் எப்படி விதிகளுக்குள் அடங்குகிறது என்பதை அவர்கள் எடுத்துக் காண்பிக்க அவர்களுக்கு உரிமை வழங்கி இருக்கிறேன். அதை விளக்க அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அவர்கள் விளக்கட்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தை தங்களுடைய அறையிலேயே படிக்கச் சொல்லித் தீர்த்திருக்க வேண்டும். இப்பொழுது இந்த மாமன்றத்தில் படித்துப் பேச அனுமதி கொடுத்திருப்பதே விதிக்கு முரணானது என்பது தான் கனம் அங்கத்தினருடைய (திரு. கரு. சீமைச்சாமி) வாதம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**திரு. என். சங்கரய்யா** : சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எந்த வகையில இந்தச் சபையிலே விவாதிக்கத்தக்கது என்பதற்கான விளக்கங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். . . . .

(திரு பி. ஜி. கருத்திருமன், திரு. கரு. சீமைச்சாமி இருவரும் இடங்களில் எழுந்து நின்றனர்.)

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் நோக்கம், சாதக, பாதகம் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இந்தத் தீர்மானத்தை கனம் சபாநாயகர் அவர்கள் தன்னுடைய அறையிலே படித்திருப்பார்கள். அதற்குப் பின்னாலே அதைப் படித்து விளக்க இங்கே அனுமதி கொடுத்திருப்பதே ஓரளவுக்கு சபாநாயகர் அதை அனுமதிக்கிறார்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். அதை இந்தச் சபைக்குக் கொண்டு வருவதற்கே அருகதையில்லை, அதைச் சபாநாயகர் அவர்கள் தன் அறையிலேயே நிராகரித்திருக்க வேண்டும் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்லி, அதற்கு ஒரு ரூலிங் கொடுக்க வேண்டும் என்று சபாநாயகர் அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அருள் கூர்ந்து விதிகள் 44, 45 ஆகியவற்றைப் படித்துப் பாருங்கள். திரு. என். சங்கரய்யா தொடர்ந்து பேசுவார்கள்.

**திரு. என். சங்கரய்யா** : சில உறுப்பினர்கள் எழுப்பியிருக்கும் பிரச்சினைக்கு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம், சட்டப் பேரவையின் முன் கொண்டுவதற்கு எவ்வளவு பொருத்தமானது என்பதை மட்டும் விளக்குவதற்கு முன்வருகிறேன். இந்த மாமன்றத்திலே உள்ள அங்கத்தினர்களும், மக்களால் தேர்ந்

தெடுக்கப்பட்ட மாநில அரசும் எவ்வளவு தூரம் அரசியல் சட்டத்தைக் காப்பாற்றக் கடமைப் பட்டுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அப்படிப் பாதுகாக்கும் பொறுப்பு இந்த மாமன்றத்திற்கும், தேர்ந்தெடுக்கப்பட்டு, [illegible]வில இருக்கும் அரசுக்கும், இல்லை என்று யாராலும் கூற முடியாது என்பதை முதலிலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, பாராளு மன்றம் போலவே, நாட்டிலே உள்ள சட்ட சபைகளுக்கும் ஜனநாயகத்தைக் காக்கும் பொறுப்பு திட்டவட்டமாக இருக்கிறது, என்பதனால்,

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**திரு. என். சங்கரய்யா :** எனவே, இந்த ஒத்திவைப்புத் தீர் மானத்திற்குப் பொருத்தம் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் அருள் கூர்ந்து விதி 45-ஐ படிக்க வேண்டும் After reading the statement to the House, அதற்குப் பிறகு The Speaker shall decide whether the matter proposed to be discussed is or is not in order.
ஆகவே, இப்பொழுது தீர்ப்புக் கூற வேண்டிய நேரம் என்னுடையது.

**திரு. என். சங்கரய்யா :** நான் சொல்லுவதைச் சொல்லி முடித்தவுடன் தாங்கள் தீர்ப்பு கூற வேண்டும் என்று கேட்டுக் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியானால், தாங்கள் ஒரே ஒரு கருத்தைப்பற்றி மட்டும் கூற வேண்டும். தாங்கள் கொடுத் திருக்கும் தீர்மானம் எப்படி தமிழக அரசின் பொறுப்புக்குள், முழுமையாக அடங்கியிருக்கிறது என்பதை மட்டும் தாங்கள் விளக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ரூல் 43-ன் படி, ஸ்பீக்கர் அனுமதி வேண்டும் . . .

**திரு. இராம. அரங்கண்ணல் :** Sir, I am raising a point of order on the point of order. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கலாமா என்பதுபற்றிய கருத்தைக் கேட்கலாம் என்ற அளவுக்கு தாங்கள் அனுமதித்து, கருத்தைச் சொல்லச் சொல்லும் போது, மற்ற அங்கத்தினர்கள் குறுக்கிட்டு, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியா என்பதுபற்றி தாங்கள் தீர்ப்புக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர்கள் கொடுக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொருத்த அளவில், சபாநாயகர் அவர்கள் இரண்டு விதத்தில் அவற்றிற்குத்

தீர்வு காணலாம். ஒன்று, அவர்கள் தன்னுடைய அறையிலேயே தீர்க்கலாம் அல்லது, கொண்டு வந்தவர்கள் ஏதாகிலும் கருத்துக் கூறுவார்கள் என்ருல், அதற்குக் காரணம் இருந்தால், அப்படி விளக்குவதற்கு வாய்ப்பு அளித்து, அதற்குப் பிறகு, தீர்ப்பு அளிக்கலாம். இப்பொழுது அந்த இரண்டாவது முறையைக் கையாண்டு விளக்கம் தெரிவிக்கச் சொன்ஞர்கள். அதிலும், குறிப்பாக, தமிழக அரசினுடைய பொறுப்பிற்கு அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் தீர்மானம், எந்த வகையில் முழு அளவிற்கு அடங்கியிருக்கிறது என்பதைத் தெளிவாக்கக் கேட்டிருக்கிருர்கள். அப்படி விளக்கம் தருவதற்கு வாய்ப்பு அளித்தால் தான், அந்தத் தீர்மானத்தை சபையில் எடுத்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்தச் சபையும், சபாநாயகரும் அறிய வாய்ப்பு ஏற்படும். அப்படி விளக்கம் கொடுக்கக் கூட நாம் அனுமதிக்கவில்லை என்ருல், தீர்மானத்திற்கு எதிரான கருத்து உள்ளவர்கள் பலஹீனமாக இருக்கிருர்கள் என்கின்ற கருத்துக்குத் தான் இடம் ஏற்படும். கருத்தைச் சொல்லுவதில் குந்தகம் ஒன்று மில்லை. குறிப்பிட்ட அளவிற்குச் சொல்லத்தான் சபாநாயகர் அவர்களே சொல்லியிருக்கிருர்கள்.

**திரு. என். சங்கரய்யா** : நாம் இதை விவாதிக்கப் பொருத்தம் இருக்கிறது. இன்றைக்கு முதலிலே நாம் பஞ்சாப் மாநிலத்தில் தாரா சிங் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கத் தீர்மானம் கொண்டு வந்தோம். அது இந்த அரசாங்கத்தினுடைய முழுப் பொறுப்பில் இருக்கும் பிரச்சனை என்று "ஸ்ட்டிரிக்டாக", கருராக சொல்ல முடியாது. அந்த அளவில் நாங்கள் குறிப்பிடும் பிரச்னைக்கும் பொருத்தம் இருக்கிறது. இந்த மாநில அரசாங்கத்திற்கு அவ்வாறு ஈடுபடுவதற்கு வேறு பொருத்தமும் உண்டு. நம் முதல் அமைச்சர் அவர்களே, இந்தச் செயல் ஜனநாயகத்திற்கு, நம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று அறிக்கை கொடுத்த பிறகு, அந்த முதல் அமைச்சரின் தலைமையின் கீழ் இப்படிப்பட்ட தீர்மானம் விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்குத் திட்டவட்டமான பொறுப்பு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்ட சபைக்கு மற்றொரு வகையிலும் பொறுப்பு இருக்கிறது. இந்த மாநில அரசு ஒரு காங்கிரஸ் அல்லாத அரசாக இருக்கிறது என்பதால், காங்கிரஸ் அல்லாத அரசிற்கு ஏற்பட்டது போல இதற்கும் அபாயம் ஏற்பட இருக்கிறது. இன்றைக்கு இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்காவிட்டால், இன்றைக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் அளித்திருக்கும் உரிமைகள் பல் வேறு காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளுக்கு மறுக்கப்படும் வகையில், நேரலாம் என்ற வகையிலும், இந்தப் பிரச்சனை இந்தச் சபையின் முன்ஞல் விவாதிக்கப்பட வேண்டிய பொருத்தமான (திரு. கே. விநயகம் : இவர்களுக்கு வேண்டிய பலம் இருக்கிறது, அங்கத்தினர் வக்காலத்து வாங்க வேண்டாம்) விஷயந்தான் என்பதை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

1967 நவம்பர் 24] [திரு. என். சங்கரய்யா]

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரி சபையை எந்த முறைகளிலே விலக்கலாம் என்பதைப்பற்றி அரசியலமைப்புச சட்டத்திலே குறிப்பிட்டிருக்கின்றனவோ அவற்றுக்கு மாறாகத் தீர்ப்பு அளிக்கப் பட்டிருந்தால், அதைப்பற்றி ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவ தற்கு மூன்றே முக்கால் கோடித் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கும் பிரதிநிதிகளுக்குப் பேச்சுரிமை இல்லையா? எந்தக் காரணத்தைக் காட்டி இந்தப் பிரச்சினையை விவாதிக்கக் கூடாது என்று சொல்ல முடியும்? ஆகவே, பாராளுமன்ற ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசைப் பாது காப்பதற்கும், குறிப்பாக காங்கிரசல்லாத மாநில அரசுகளைப் பாதுகாப்பதற்கும் உரிய இந்தப் பிரச்சினையை விவாதிப்பது பொருத்தமானது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாருடைய கருத்தைக் கேட்க வேண்டும், யாருடைய கருத்தைக் கேட்க வேண்டாம் என்று முடிவு செய்ய வேண்டியது என்னுடைய பொறுப்பாகும். ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தவருடைய கருத்தை நான் கேட்டுக் கொண்டேன். அரசினர் சார்பாக, இந்தக் காரியத்தைப்பற்றி, ஏதாவது கூறவேண்டுமென்றால், கூறலாம்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. I request the Chair to hear me. It is a very important point of order. Sir, when a similar occasion arose and the hon. Member, Thiru. Krishnaswami Gounder explained what happened in Vettakaran Puthur, Coimbatore District, the Hon. Speaker did not allow him to proceed and explain his point and he actually struck the bell. Why didn't he strike the bell now? Then he did not allow us to explain the matter.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் விதிகளை தெளிவாகப் படிக்க வேண்டும்.

• • • • •

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இரண்டு கட்டங்களில் ஆராய வேண்டும். ஒன்று—பேரவைத் தலைவர் அலுவலகத்தில். மற்றொன்று—பேரவையில், பேரவைத் தலைவருடைய அலுவலகத்தில் பார்த்துத் தள்ளுபடி செய்த காரியங்களைப்பற்றி இங்கே கொண்டு வரக் கூடாது. தாங்கள் சொல்வது அப்படிப்பட்டதாக இருக்க முடியும்.

இப்பொழுது இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டுவருவது நடைமுறை விதிகளுக்கு உட்பட்டதாக இருக் கிறதா என்பதை முடிவு செய்ய வேண்டிய கட்டமாகும். அப்படி முடிவு செய்வதற்கு முன்னால், நான் இரண்டு பேர்களைத்தான்

** பேரவைத் தலைவரின் ஆணைப்படி அகற்றப்பட்டது.

கேட்க வேண்டியது வழக்கமாக இருந்து வருகிறது, நடைமுறையாக இருந்து வருகிறது. தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் அதைக் குறித்து முதலில் பேசலாம், அடுத்து, அரசினர் சார்பாக ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால், சொல்லலாம். இல்லையென்றால், என்னுடைய தீர்ப்புக்கு விட்டுவிடலாம்.

DR. H. V. HANDE: Why did not the Chair allow Thiru Krishnaswamy Goundar in the case of Vettakaran Puthur?

(Some hon. Members rose)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்கார வேண்டும்.

• • • • •

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆங்கிலத்தில் சொல்லுகிறீர்கள். நான் தமிழில் சொல்லுகிறேன். அது தான் வேற்றுமை. (சிரிப்பு).

இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர் திரு. என். சங்கரய்யா அவர்கள், இது எப்படி இந்தத் தமிழக அரசின் நிர்வாகப் பொறுப்புக்கு உட்பட்டது என்பதற்கு ஒரே ஒரு காரணத்தை மட்டும் சொன்னார்கள். அது என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு நிலைமை இந்தத் தமிழக அரசுக்கும் இனி ஏற்படக்கூடும் என்ற நிலை இருக்கிறது, என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் விதிகளைப் படித்துப் பார்த்தால்,

"The motion must be restricted to a specific matter of recent occurrence."

என்று இருப்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதாவது, ஏற்கனவே நடைபெற்று முடிந்த ஒரு காரியத்தைப்பற்றி விவாதம் செய்யலாமே தவிர, இனிமேல் வரப்போகிற காரியத்தைப்பற்றி, அதாவது, வருங்காலம் அல்லது எதிர்காலத்தில் ஏற்படப்போகிற ஒரு காரியத்தைப்பற்றி விவாதிப்பதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானம் இடம் கொடுக்காது.

இரண்டாவது, அவர்களே ஒன்றை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைக் கண்டிப்பாகப் பார்த்தால், அதில் கண்டுள்ள காரியம் தமிழக அரசின் பொறுப்புக்கு உட்பட்டதல்ல என்பதை அவர்களே நம்முடைய பேச்சில் ஒரு முறை குறிப்பிட்டார்கள்.

"The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved."

என்று பேரவை விதி தெளிவாகக் குறிப்பிடுகிறது. எனவே, இப்பொழுது கொண்டுவந்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானத்தை, பேரவை விதி 50 (10)-ன் கீழ், அனுமதிக்க முடியாது என்று நான் தெரிவிக்கின்றேன்.

---

•• பேரவைத் தலைவரின் ஆணைப்படி அகற்றப்பட்டது.